# 7 திருவள்ளுவர்



தமிழ் மொழியில் உள்ள நீதி நூல்களுள் சிறந்தது திருக்குறள். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்னும் மாபெரும் புலவர். திரு என்பதற்கு மேன்மை என்பது பொருள். திருக்குறள் மேன்மையான நீதிகளைக் கூறும் நூல். ஆகையால், இதற்கு இப் பெயர் வந்தது.

திருவள்ளுவர் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். அவர் இளமைப் பருவத்திலேயே கற்பனவற்றைக் கசடறக் கற்றார். கற்ற வழியில் நின்று கடவுள் நெறியைப் போற்றினார். அன்பு, இன்சொல், அடக்கம் ஆகிய அருங்குணங்கள் எல்லாம் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன.

அரசன் ஆணையை முரசு அறைந்து தெரிவிக்கும் அலுவலர்களுக்கு வள்ளுவர் என்னும் பெயர் இருந்தது. திருவள்ளுவர் அந்த இனத்தவரே என்றும் சிலர் கூறுவர்.

திருவள்ளுவர் தெய்வத் தன்மை வாய்ந்தவராகையால் திருவள்ளுவரை மக்கள் 'தெய்வப் புலவர்' என்று போற்றினார்கள். அவருக்குத் தேவர், நாயனார், பொய்யாமொழியார் முதலிய வேறு பெயர்களும் உண்டு.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் சாதி, மத, இன வேறுபாடு பாராட்டாத ஒரு பொது நூல். உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொதுவான நீதிகளை எடுத்துக் கூறுவதால் இதனை 'உலகப்பொதுமறை' என்றும் கூறுவர்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது ஒரு முதுமொழி. இதில் நாலு என்பது நாலடியார் என்னும் நீதிநூலையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும். திருக்குறள் ஆங்கிலம், கிரேக்கம் இலத்தீன் முதலான உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது. அதனால், இதனை 'முப்பால்' நூல், என்றும் கூறுவர். இந்நூல் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

மக்கள் யாவரும் சமம். பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. எல்லோரும் குற்றமில்லாமல் கற்க வேண்டும். கற்ற வழியில் நடக்க வேண்டும். ஒழுக்கம், இன்சொல், அடக்கம், அன்பு முதலிய குணங்களோடு வாழ வேண்டும். தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும். இத்தகைய உயர்ந்த நீதிகளைத் திருக்குறளில் படித்து அறியலாம். மாணவர்களே! நீங்கள் சிறு வயதிலேயே ஒரு நாளைக்கு ஒரு குறளாவது மனப்பாடம் செய்யப் பழகுவது மிகவும் நல்லது.

**''நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது''**


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | இயற்றியவர் | - | රචකයා/කතෘ |
| 2. | புலவர் | - | කවියා |
| 3. | மாபெரும் | - | විශාල/ලොකු |
| 4. | மேன்மை | - | උතුම් |
| 5. | நூல் | - | පොත |
| 6. | கசடு அற | - | නිවැරදිව |
| 7. | இன்சொல் | - | මිහිරි වචන |
| 8. | அடக்கம் | - | නිරහංකාර |
| 9. | அருங்குணம் | - | යහපත් ගුණධර්ම |
| 10. | ஆணை | - | නියෝග/අණ |
| 11. | முரசு அறைந்து | - | අඬ බෙර ගසා |
| 12. | பழமொழி | - | ප්‍රස්තාව පිරුළු |
| 13. | ஒழுக்கம் | - | විනය |
| 14. | அறிவு | - | නුවණ |
| 15. | ஆலும் வேலும் | - | නුග හා කොහොඹ |
| 16. | நீதி | - | නීතිය |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. திருவள்ளுவரின் அருங்குணங்கள் எவை?
2. திருவள்ளுவரின் வேறு பெயர்கள் எவை?
3. திருக்குறள் எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை?
4. திருக்குறளை “ உலகப் பொது மறை” எனக் கூறுவது ஏன்?
5. திருக்குறள் கூறும் நீதிக்கருத்துக்கள் ஐந்தினை எழுதுக.

### செயற்பாடு - I

**மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து இடை வெளியை நிரப்புவோம்.**
**ඉතා සුදුසු වචන යොදා හිස්තැන් පුරවමු.**

**(இன்சொல், மேன்மை, மயிலாப்பூரில், முரசு, திருவள்ளுவர், பழமொழி, திருக்குறள், தெய்வப்புலவர் முப்பால் நூல்)**

1. திருவள்ளுவரை மக்கள்........................என்று போற்றினர்.
2. திருக்குறளை ........................................ என்றும் கூறுவர்.
3. திரு என்பதற்கு ......................................என்பது பொருள்.
4. திருக்குறளை ............................................ இயற்றினார்.
5. தமிழ் மொழியில் உள்ள நீதி நூல்களுள் சிறந்தது ..................... ஆகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - II

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைப்போம்.**
**පහත සඳහන් වචන යොදා වාක්‍ය සාදමු**

1. புலவர் - ------------------------------------------------------------
2. ஏறத்தாழ - ------------------------------------------------------------
3. அடக்கம் - ------------------------------------------------------------
4. முரசறைந்து - ------------------------------------------------------------
5. பழகி - ------------------------------------------------------------

## செயற்பாடு - III

(1) உமக்குத் தெரிந்த தமிழ்ப் புலவர் ஒருவரைப்பற்றி பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

(2)

i ‘‘திருக்குறள் ’’ எனும் தலைப்பில் குழுரீதியாகக் கலந்துரையாடி மேடைப்பேச்சு ஒன்றினை எழுதுங்கள்.

ii அதனை வகுப்பறையில் பேசிக் காட்டுங்கள்.

(3) தமிழ் மொழியில் உள்ள இலக்கிய நூல்கள் ஐந்தின் பெயர்களை எழுதுக.

(4) தமிழ் மொழியிலுள்ள பழமொழிகள் பத்து எழுதுக.

## இலக்கணம்

**வாக்கிய உறுப்புக்கள் - எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்**

i. அரசன் ஆணையிட்டான்.

ii வள்ளுவர் சிந்தித்தார்.

iii திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

மேற்கூறிய தொடர்களில் பெயர்ச் சொற்கள் **எழுவாயாகவும்** வினைச் சொற்கள் **பயனிலையாகவும்** வந்துள்ளன.

| **எழுவாய்** | **பயனிலை** |
|---|---|
| திருவள்ளுவர்<br>அரசன்<br>வள்ளுவர் | எழுதினார்<br>ஆணையிட்டான்<br>சிந்தித்தார் |

குறிப்பு :-

i. செயலானது முற்றுப் பெற்று வருவதே பயனிலையாகும்.

ii பயனிலையுடன் யார்? யாவர்? எது? எவை? என்ற வினாக்களை வினாவுவதன் மூலம் எழுவாயை இனங்காணலாம்.

- திருவள்ளுவர் **திருக்குறளைப்** பாடினார்.
- நான் **திருக்குறளை** மனனம் செய்வேன்.
- மாலா **நாலடியாரைப்** பாடி மகிழ்ந்தாள்.

மேற்கூறிய தொடர்களில் **திருக்குறளை, நாலடியாரை** என்ற சொற்கள் **செயப்படுபொருளாக** வந்துள்ளன.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

செயப்படுபொருள் என்பது ஒரு பெயர்ச் சொல் ‘ஐ’ உருபு ஏற்று வருவதாகும்.

உதாரணம் :-

| | | | | |
|---|---|---|---|---|
| திருக்குறள் | + ஐ | = | திருக்குறளை |
| நாலடியார் | + ஐ | = | நாலடியாரை |

i. பயனிலையுடன் **எதை? எவற்றை? யாரை? யாவரை?** என்ற வினாக்களை வினாவுவதன் மூலம் செயப்படுபொருளை இனங்காணலாம்.

## *செயற்பாடு* - IV

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை அட்டவணைப்படுத்துவோம்.**

- திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
- நான்கு வரிகளை நாலடியார் கொண்டுள்ளது.
- திருக்குறள் முப்பாலையும் கூறுகிறது.
- நாம் கற்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்
- நீங்கள் திருக்குறளை மனப்பாடம் செய்யுங்கள்.

| **எழுவாய்** | **செயப்படுபொருள்** | **பயனிலை** |
|---|---|---|
| ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ |